**செ. கு. எண்**:187 **நாள்**:22.05.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 22.5.2012

சென்னை பெருநகர காவல், B – 4 உயர்நீதிமன்ற காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வந்த திரு. R.சம்பந்தம் அவர்கள் 20.5.2012 அன்று பணியில் இருக்கும் போது மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

T-8 முத்துப்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. D.சம்பத்குமார் அவர்கள் 22.5.2012 அன்று திருமுல்லைவாயல் – சோழம்பேடு சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சம்பந்தம் மற்றும் உதவி ஆய்வாளர் திரு. சம்பத்குமார் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாரடைப்பினால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் R.சம்பந்தம் மற்றும் சாலை விபத்தில் காலமான உதவி ஆய்வாளர் திரு. D.சம்பத்குமார் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**